செ.வெ.எண்:28 நாள்:24.04.2021

# *மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்களின் செய்தியாளர் சந்திப்பு.*

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (24.04.2021) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா நோய் தொற்று பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது.

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:**

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுப்பதற்காக, மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் பல்வேறு கட்டங்களில் பல்வேறு தளர்வுகளுடன் பொதுமக்களின் நலன் கருதி ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள நோய் பரவல் நிலை, வெளிநாடுகளில் உருமாறிய கொரோனா வைரஸின் தாக்கம், அண்டை மற்றும் இதர வெளிமாநிலங்களில் அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் பாதிப்பிற்குள்ளானவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கொரோனா வைரஸ் நோய்த்தொற்றை தடுப்பதற்காக, மீண்டும் பல்வேறு கட்டுப்பாடுகளுடன் ஊரடங்கு தொடர்ந்து 30.04.2021 நள்ளிரவு 12.00 மணி வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து 20.04.2021 முதல் 30.04.2021 வரை இரவு நேர ஊரடங்கும், 25.04.2021 (ஞாயிற்று கிழமை) அன்று முழுநேர ஊரடங்கும் நடைமுறைப்படுத்தப்படும்.

கொரோனா வைரஸ் நோய் தொற்று உலகளாவிய பொதுசுகாதார அவசர நிலையாக அறிவிக்கப்பட்ட நிலையில், பொதுமக்களின் அன்றாட வாழ்வு மற்றும் பொருளாதார சூழ்நிலையில் பாதிப்பு ஏற்படாத வகையில் தமிழ்நாடு அரசு மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 25.03.2020 முதல் சுகாதாரத்துறை, காவல்துறை, வருவாய்த்துறை, உள்ளாட்சித்துறை மற்றும் பிறதுறைகள் சார்ந்த முன்களப் பணியாளர்கள் இணைந்து பொதுமக்களை கொரோனா நோய்த்தொற்று பாதிப்பிலிருந்து பாதுகாத்து வருகின்றனர். மேலும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் குழுக்கள் அமைக்கப்பட்டு மாநில எல்லைகளின் வழியாக வரும் வாகனங்கள் முழு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அனுப்பும் பணிகள், வெளிநாடு மற்றும் வெளிமாநிலங்களிலிருந்து வரும் நபர்களை தொடர்ந்து கண்காணிக்கும் பணிகள், தொடர் **RTPCR** பரிசோதனைகள், என பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இருந்தபோதிலும், கொரோனா நோய்த்தொற்று இரண்டாம் அலை பரவி வரும் இச்சூழ்நிலையில் பொதுமக்கள் முழுவிழிப்புணர்வுடன் செயல்பட்டு சுயபாதுகாப்புடன் தங்களையும், சமுதாயத்தையும் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து பாதுகாக்க வேண்டும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 5 கொரோனா தொற்று பரிசோதனை ஆய்வகங்கள் மூலம், 23.04.2021 வரை பரிசோதனை செய்யப்பட்ட 2,73,744 நபர்களில் 2,61,075 நபர்களுக்கு கொரோனா தொற்று இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. நாளதுவரை 12,669 நபர்கள் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டு 9,384 நபர்கள் குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர். 2,162 நபர்கள் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், தயார்நிலையில் உள்ள அரசு மருத்துவமனை படுக்கை வசதிகளில் 36 சதவிகிதம் மட்டுமே நோய் தொற்று உள்ளவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். மீதமுள்ள நோய் தொற்று கண்டறியப்பட்டவர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். மருத்துவமனைகளில் உள்ள 96 நபர்கள் மட்டுமே பிராண வாயு உதவியுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். தனியார் மருத்துவமனைகளில் 205 நபர்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், இன்று (24.04.2021) கூடுதலாக சுமார் 250 படுக்கை வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி அரசு தலைமை மருத்துவமனையில் 24 மணிநேரமும் தங்குதடையின்றி நேரடியாக பிரணவாயு (Oxygen) செலுத்தும் வகையில் புதியதாக 13 ஆயிரம் லிட் கொள்ளவு LIQUID OXYGEN TANK அமைக்கப்பட்டுள்ளது. தனியார் மருத்துவமனையில் 4,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட LIQUID OXYGEN TANK மற்றும் தேவையான அளவு பிராணவாயு வசதிகள் இருப்பில் உள்ளது.

நாளதுவரை சுகாதாரப்பணியாளர்கள், முன்களப்பணியாளர்கள், 45 வயதிற்கு மேற்பட்ட பொதுமக்கள் என மொத்தம் 1,29,954 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், போதுமான அளவு கொரோனா தடுப்பூசி, மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்கள் இருப்பில் உள்ளது. பாரம்பரிய மருத்துவ சிகிச்சைகளான சித்தா, யோகா, இயற்கை வைத்தியம் போன்ற சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் 1939-ன் கீழ் பொது இடங்களில் முககவசம் அணியாதவர்கள், தனிமைப்படுத்தல் விதிமுறை மீறியவர்கள், பொது இடங்களில் எச்சில் துப்பியவர்கள், சமூக இடைவெளியை கடைப்பிடிக்காதவர்கள், அரசு வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றாத வணிக நிறுவனங்களிலிருந்து அபராதமாக ரூ.55,93,900/- வசூலிக்கப்பட்டுள்ளது.

மாநில எல்லையான ஜூஜூவாடி சோதனை சாவடியில் சுகாதார துறை, வருவாய் துறை, காவல் துறை இணைந்து பிற மாநிலங்களிலிருந்து வரும் வாகனங்களை (கர்நாடகா, ஆந்திரா, புதுச்சேரி மாநிலத்தை தவிர்த்து) தீவிர சோதனை மேற்கொண்டு உரிய அனுமதி பெற்ற (இ-பாஸ்) வாகனங்கள் மட்டும் அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், வாகனங்களில் பயணம் செய்பவர்களுக்கு உடல் வெப்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்று கட்டுப்படுத்தவும், அரசு வழிகாட்டு நெறிமுறைகளை தவறாமல் பின்பற்றுவதை உறுதி செய்யவும் வட்டாட்சியர் மற்றும் உதவி காவல் ஆய்வாளர் நிலையிலான அலுவலர்கள் கொண்ட 9 சிறப்பு பறக்கும் படை அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

அதேபோல, 20.04.2021 முதல் இரவு நேர ஊரடங்கு அறிவித்துள்ளதை தொடர்ந்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து பிற மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களுக்கு பொதுமக்கள் இரவு 10.00 மணிக்குள் செல்லும் வகையில் நான்கு இடங்களில் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. முழுநேர ஊரடங்கு தொடர்பாக புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள் மற்றும் தேவையான தகவல்கள் வழங்க மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சிறப்பு கட்டுப்பாட்டு அறையில் செயல்படும் கைபேசி எண்:9486589038 மற்றும் தொலைபேசி எண்:04343-234424 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். மேலும், சுற்றுலாத்தலமான கிருஷ்ணகிரி அணை, அவதானப்பட்டி சிறுவர் பூங்கா மற்றும் அருங்காட்சியகங்கள் ஆகிய இடங்களுக்குச் செல்ல பார்வையாளர்களுக்கு அனுமதி ரத்து செய்யப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் பொது இடங்களில் சமூக இடைவெளியை கடைபிடித்தும், முககவசம் அணிந்தும், அடிக்கடி கைகளை சோப்பு பயன்படுத்தி கழுவியும், தேவையில்லாமல் வெளியில் செல்வதை தவிர்த்தும், தமிழக அரசின் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து கொரோனா நோய் தொற்றுலிருந்து தங்களை பாதுகாத்து கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூாரி முதல்வர் மரு.ஆர்.முத்துசெல்வன், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.பரமசிவன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.பி.முருகன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**